சார்பு நீதிமன்றம், இலால்குடி.

நாள். 21.09.2023

OS.NO.117/2020

PW1: திரு.முனைவர் ஜஹான் (வயது 60) க/பெ. காஜாமொய்தின்

( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கில் 8ம் பிரதிவாதி என்ன கட்சி செய்கிறார் என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் அவர் பங்கு வேண்டும் என்று கேட்கிறார். 8ம் பிரதிவாதி என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதி தனக்கு ஆவணம் இருப்பதாக சொல்வதாக எனது வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். நான் அதற்கு அவர்களிடம் ஆவணம் இல்லை என்று சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 1927ஆம் ஆண்டு ஆவண எண் 1376 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். ஜீன் மாதம் 9ம் தேதி 1927 ஆம் ஆண்டு ஏற்பட்டதாக கண்டுள்ளது. அந்த ஆவணத்தில் சைதா முகமது பாரியால் பாத்திமா பீபி அவர்கள் காதர் சாகிப் மனைவி மதார் பிபி அம்மாளுக்கு இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். எங்களுடைய ஆவணம் 1919ல் ஏற்பட்டதாகும். மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அயன் புஞ்சை சர்வே எண். 75 நம்பர் இரண்டாவது லட்டர் திட்டம் ஏக்கர் 1 டிசமல் 54ல் மேல்புறம் டிசமல் 51 இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த 09.06.1927 தேதியிட்ட இனாம் சாசனம் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 1. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 1927ஆம் ஆண்டு ஆவண எண்.1375 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் ஜீன் மாதம் 9ம் தேதி 1927 ஆம் ஆண்டு ஏற்பட்டதாக கண்டுள்ளது. அந்த ஆவணம் சைதா முகமது பாரியால் பாத்திமா பீபி அவர்கள் அப்துல் லதிப் சாயபு

பாரியால் மரியம் பிபி அம்மாளுக்கு இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அந்த ஆவணத்தில் அயன் புஞ்சை சர்வே எண். 75 நம்பர் இரண்டாவது லட்டர் திட்டம் ஏக்கர் 1 டிசமல் 54 ல் நடுபாகம் டிசமல் 52 ல் இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளதாக கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த 09.06.1927 தேதியிட்ட இனாம் சாசனம் (ஆவண எண். 1375/1927) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 2. என்னிடம் காட்டப்படும் ஆவணம்1927 வருடத்திய ஆவண எண்.1377 என்றால் சரிதான். இந்த ஆவணமும் ஜீன் மாதம் 9 ம் தேதி 1927 ல் தயார் செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணமும் சைதா முகமது பாரியால் பாத்திமா பீபி அவர்கள் மீரா சாயபு பாரியால் அமீர் பிபி அம்மாள் அவர்களுக்கு இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளது என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.75/2 ல் திட்டம் ஏக்கர் 1 டிசமல் 54 ல் கீழ்புறம் டிசமல் 51 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். அந்த 09.06.1927 தேதியிட்ட இனாம் சாசனம் (ஆவண எண். 1377/1927) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3. வழக்குரையில் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது மேற்படி மூன்று ஆவணங்களின் படி காதர் சாகிப் மனைவி மாதர் பிபி அம்மாள் மீரா சாகிப் மனைவி அமீர் பிபி அம்மாள், அப்துல் லதிப் சாகிப் மனைவி மரியம் பீபி அம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் எனக்கு பாகம் உரிமை இல்லை என்றால் அது சரியல்ல. எனது ஆவணம் முன்னாடி இருக்கிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் மேற்படி மூன்று நபர்கள் பெயர் இருக்கிறது என்றால் பெயர் இருக்கிறது ஆனால் ஆட்கள் வேறு ஆகும். ஆதம் சாகிப் மனைவி மதார் பீபி என்று குறிப்பிட்டு நான் ஆவணம் செய்யவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். 1927 ல் ஏற்பட்ட மேற்படி மூன்று ஆவணங்கள் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. ஆதம் சாகிப் மனைவி மதார் பிபி அம்மாள் என்று நான் வா.சா.ஆ.3 ஆவணத்தை திருத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் ஆவணம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை திருத்தம் செய்ய சொல்லி வட்டாட்சியரிடம்

நான் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் இல்லை என்றாலும் அது பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் மதார் பீபி, அமிர் பீபி, மரியம் பீபி வம்சாவழி தாக்கல் செய்துள்ளேன். எனது ஆவணத்தை எடுத்தால் வம்சாவழி வரும். எங்களுக்கும் 1 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் உள்ள உறவு முறை பற்றி வழக்குரையிலோ எனது முதல் விசாரணை சாட்சியத்திலும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு மறந்துவிட்டது. இந்த வழக்கில் 8ம் பிரதிவாதி தன்னை தரப்பினராக சேர்க்க சொல்லி மனு போட்டார் என்றால் சரிதான். அவர் தாக்கல் செய்த மூன்று ஆவணங்களை நான் தெரிந்து கொண்டு அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பாகம் கோரிய சொத்து எனக்கு பாத்தியம் பட்ட சொத்து அல்ல என்றாலும் எனக்கு பாகம் இல்லை என்றாலும் அது சரியல்ல. ஒரே பெயர் உள்ளதை தனக்கு சாதகமாக பயன்ப டுத்தி கொண்டு 8ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்கும் எண்ணத்தோடு நானும் 1 முதல் 7 பிரதிவாதிகளுடன் கூட்டு சேர்ந்து பாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது தவறு. இந்த வழக்கில் உண்மையான உரிமைதாரரை மறைத்து தாங்களும் 1 முதல் 7 பிரதிவாதிகளும் உரிமைதாரராக காட்டி பாக வழக்கு சொத்தை அபகரிக்க தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் அது சரியல்ல. அந்த சொத்து எங்களுக்கு உரிமையான சொத்தாகும். அதை அபகரிக்க வழக்கு தாக்கல் செய்யவில்லை. 8ம் பிரதிவாதி என் மீது அசல் வழக்கு எண். 252/2012 என்ற வழக்கு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடியில் நிலுவையில் உள்ளது என்றால் அது தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கு இந்த மாதத்தின் ஆரம்பத்தில் முடிந்தது. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 8ம் பிரதிவாதி வழக்கின் சொத்தின் உரிமையாளரான அசாம் பீபி என்பவரை மறைத்து உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளதற்கு இன்றைய தினம் வரை மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் அவர்கள் எங்கள் வகையறாவை சேர்ந்தவர்கள். உயிலில் விபரங்கள் உள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளோம்.

எனது வழக்குரையிலோ அல்லது முதல் விசாரணையிலோ நான் உயிலை பற்றி சொல்லவில்லை என்றால் தற்போது நீங்கள் கேட்பதால் அதை சொல்கிறேன். அந்த உயிலை யார் எழுதி வைத்தது என்றால் பாபா சாகிப் ஆகும். அந்த உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றரல் முடியும். அது பதிவு செய்யப்பட்ட உயிலாகும். அந்த உயில் எந்த வருடம் பதிவு செய்யப்பட்டது என்றரல் 1919 ஆகும். அந்த உயில் கைவசம் இருக்கிறதா என்றால் என் கைவசம் இல்லை. அது சீரங்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ளது. அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை நான் அடுத்த வாயிதாவில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னால் முடியாது. எனது வழக்கறிஞர் தான் அதை பார்க்க வேண்டும். அந்த உயிலின் அசல் யார் கைவசம் இருக்கிறது என்றால் என் கைவசம் இருந்து அது பொரிந்துவிட்டது. அது குப்பையாக போய்விட்டது. என் கைவசம் அது இல்லை. அந்த உயில் என் கைவசம் தான் இருக்கிறது என்றாலும் அதை தாக்கல் செய்தால் சொத்து போய்விடும் என்பதற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உயில் இருந்திருந்தால் எனது வழக்குரையிலும் முதல விசாரணையிலும் சொல்லியிருப்போம் என்றாலும் அதை தற்போது சாட்சிய விசாரணையில் தான் இருப்பதாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 8ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1927 ஆம் ஆண்டு மூன்று பத்திரங்களை தாக்கல் செய்துள்ளதால் அதற்கு முன்னிட்டு ஆவணம் இருப்பதாக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு மூலமே எழவில்லை என்றாலும் பொய்யான சங்கதிகளை கொண்டு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் அது சரியல்ல. தாவா சொத்திற்கும் நான் சொல்கின்ற உயிலுக்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, நான் உண்மையை தான் சொல்கிறேன். அசான் பீபிக்கு எங்கள் வயலில் 5 ல் ஒரு பாகம் சாப்பாட்டிற்கு கொடுத்திருக்கிறோம். அந்த விபரத்தை எனது வழக்கிரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அந்த விபரம் தற்போது தான் எனக்கு தெரிய வந்து சொல்கிறேன். அந்த விபரத்திற்கு எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் அது சரியல்ல. அது இலால்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருக்கிறது.

அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.